**கல்னேவ பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 17 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுன் 08 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 04 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்னேவ பிரதேச சபையின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கந்தேகம, முஸ்னவ, நாகல்கமுவ ஆகிய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நீர் இணைப்பு 436 இன் மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட பெறுமதியான ரூபா1,357,478 கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மேற்படி நீர்வழங்கல் கருத்திட்டங்களின் மூலம் மேலும் அறவிட வேண்டியிருந்த ரூபா1,543,026 பெறுமதியான நீர் இணைப்பு நிலுவைக் கட்டணங்களும் கணக்கிலிடப்படவில்லை. | உரிய ஆண்டுக்கான வருமானம் மற்றும் நிலுவை வருமானத்தை சரியாக கண்டறிந்து கணக்கிலிடப்படல் வேண்டும். | நீர்வழங்கல் கருத்திட்டத்துக்கான வருமானம் செலவு, சேமிப்பு கணக்கொன்றில் பதியப்பட்டு மீதியை முன்நோக்கி கொண்டுவரப்பட்டுள்ளது. |
| (ii) | புல்நேவ சந்தை பூமியில் கடைகள் அமைப்பதற்காக வாரச்சந்தை குத்தகைதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா3,461,000 பெறுமதியான கடன் தொகை | சபையால்பெற்றுக் கொண்ட கடன்தொகை மற்றும் உரிய வருமானத்தை | புல்நேவ சந்தை பூமியில் கடைகள் அமைப்பதற்காக வாரச்சந்தை குத்தகைக்காரர்கள் 16 பேரிடமிருந்து ரூபா4,800,000 |

| | | |
|---|---|---|
| நிதியறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவ்வாண்டு குறித்த கடன் தொகையிலிருந்து வருடாந்தம் கடை கூலியாக அறவிடவேண்டிய ரூபா53,900 பெறுமதியான நிதி மொத்த நிதிக் கணக்கிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிந்தது. | சரியாக கண்டறிந்து கணக்கிலிடப்படல் வேண்டும். | பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதில் ரூபா800,000 கடை அறை வைப்பாக முன்னால் கொண்டுவரப்பட்டுள்ளது. மிகுதி நிதியைப் பயன்படுத்தி 2018ஆம் ஆண்டில் கடை அறைகள் கட்டுவதற்காக ரூபா4,181,746 செலவு செய்யப்பட்டது. |

**(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 தொடக்கம் 04 வருட காலமாக இருந்துவரும் ரூபா 1,756,222 பெறுமதியான கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து கூறப்படவில்லை |

(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| 02 தொடக்கம் 35 வருட காலமாக இருந்துவரும் ரூபா1,634,728 பெறுமதியான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 03 செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதியைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | காலாவதியான வைப்புத்தொகைகளை வருமானத்துக்கு உள்ளெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

**தகவல் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 293,733 ஆகவுள்ள 3 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளின் | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |

பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2)ஆம் உப பிரிவு | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) ஆம் உப பிரிவுக்கிணங்க செயற்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |
| (ஆ) | மோட்டர் போக்குவரத்துச் சட்டம் 203ஆம் அதிகாரம் 2(1)ஆம் பிரிவு | ரூபா 500,000 கிரயமான டேலர்கள் 02 பதிவு செய்யப்படாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | பதிவு செய்யப்படாத வாகனங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,242,950 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,360,892 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,104,200 | 2,297,020 | 2,385,270 | 897,300 | 2,090,000 | 2,299,870 | 2,290,370 | 985,550 |
| (ii) | வாடகை | 2,152,300 | 2,152,300 | 1,998,556 | 725,895 | 1,084,900 | 1,164,300 | 1,041,770 | 572,151 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 600,000 | 351,000 | 402,850 | 203,575 | 400,000 | 529,900 | 512,600 | 255,425 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,709,390 | 12,603,020 | 11,753,514 | 10,494,090 | 8,135,000 | 10,451,375 | 7,000,000 | 9,644,584 |
| | மொத்தம் | 13,565,890 | 17,403,340 | 16,540,190 | 12,320,860 | 11,709,990 | 14,445,445 | 10,844,740 | 11,457,710 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134(i) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை வெளிப்படுத்தி வீதவரியை அறவிடப்படவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை வர்த்தமானிப் பத்திரத்தில் வெளிப்படுத்தி, வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். | வீதவரியை அறவிடுவதற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை இனங்கண்டு வீதவரி வலயமாகப் பெயரிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு 601 அலகுகளுக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை குப்பை வரி ரூபா 581,250 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | உரிய குப்பை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய குப்பை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு கல்னேவ வியாபாரத் தொகுதியில் 20 கடை அறை அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடை அறை வாடகை நிலுவையான ரூபா 298,078 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை நிலுவையை பிரதேச சபை சட்டத்துக்கு இணங்க அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு 112 வியாபார அலகுகளில் அறவிடப்பட வேண்டிய வியாபார வரி நிலுவைத் தொகை ரூபா 122,250 மற்றும் 113 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 93,400 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வியாபார வரி நிலுவை மற்றும் அனுமதிப்பத்திர பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. |

### 2.2.5 கைத்தொழில் அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு 28 கைத்தொழில் அலகுகளில் இருந்து வருடம் 01 இற்கும் 02 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய கைத்தொழில் வரி நிலுவை ரூபா 39,000 அறவிடப்படவில்லை. | நிலுவை கைத்தொழில் அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த நிலுவை கைத்தொழில் வரியை உரியவாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.6 விலைமனு வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ஆண்டு 2001 லிருந்து 2018 வரை 20 அலகுகளுக்கு அறவிடப்பட வேண்டிய விலைமனு வரி நிலுவை ரூபா 334,317 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விலைமனு வரி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த விலைமனு வரித் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 டிசம்பர் 31 க்கு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 10,129,240 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 364,850 ஆகும். | பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த நீதிமன்ற தண்டப் பணத் தொகையில் ரூபா 7,500,000 அறவிடப்பட்டுள்ளது. முத்திரைக் கட்டணப் பெறுமதி திறைசேரியிடம் கோரப்பட்டுள்ள போதும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 28 | சபையினால் இதுவரை உப விதிகளைப் |

| | | |
|---|---|---|
| பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டியிருப்பினும், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிரயோகிக்கப் பட்டிருக்கவில்லை | பிரதான விடயங்கள் தொடர்பாக நிலையான உப விதிகள் இல்லாத விடயங்களில் உப விதிகளைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரயோகிக்கப்படாவிடினும் நிலையான உபவிதிகளை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்பான 16 துணை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ள விடயங்களை ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயல் நடவடிக்கை திட்டத்துக்கமைய நிறைவேற்றப்படாமல் இருந்த துணை செயற்பாடுகளை 2020 இல் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை செயற்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் ˙இலக்குகள் தாபித்து செயற்படுத்தப்பட வேண்டும். | 2020 பாதீட்டின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றுவதற்குரிய நியதிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை வரிசைப்படுத்தி அதற்கு நிதிஏற்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.2.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 6,390,000 பெறுமதியான கெப் வாகனமும் ரூபா 250,000 பெறுமதியான டிராக்டர் பௌசரும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.2.2 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்துவரும் ரூபா 2,042,323 பெறுமதியான இயந்திரசாதன உருப்படிகள் 36 பல வருடங்களாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்பட முடியுமான சொத்துக்களை சீராக்கல் செய்து பயன்படுத்தவும் ஏனைய சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கல்னேவ மற்றும் நேகம்பஹ பொது நூல்நிலையங்களில் ரூபா 55,588 பெறுமதியான 592 புத்தகங்கள் காணாமல்போயிருந்தன. | காணாமல் போன புத்தகங்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

04. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆம் திகதிய 2015/04 இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கு இணங்க 2019 சனவரி 21 ஆந் திகதி நேரடியாக பொறுப்புக்கூறும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டு இருந்தும் மீளாய்வாண்டிற்காக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |